DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE III, TRICHIRAPPALLI.

Present : Thiru. K.R.Balaji B.A,B.L.(Hons)

Judicial Magistrate III, Tiruchirappalli..

STC.277/2023

Deposition of witness for PW.4

| | |
|---|---|
| Name | : திருமதி. ப்ரீடா ஜெபக்குமாரி |
| Father /Wife of | : ஜோதிபிரகாசம் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : காவல் சிறப்பு உதவி ஆய்வாளர் |
| Religion | : |
| Age | : 53/24 |

Solemnly affirmed in accordance with the provisions of OATHS Act of 1969 on the day of 27.03.2024

<u>முதல் விசாரணை (அரசு தரப்பில்)</u>

1. நான் தற்போது ஜீயபுரம் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கை பதிவு செய்து புலன் விசாரணை செய்த உதவி ஆய்வாளர் திரு. செல்வராஜ் அவர்களுடன் நான் பணிபுரிந்து வந்ததால் அவரின் கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சையமாகும். மேற்படி உதவி ஆய்வாளர் பணிமாறுதல் பெற்று வேறு மாவட்டத்திற்கு சென்று விட்டதால் காலதாமதத்தினை தவிர்க்கும் பொருட்டு நீதியின் நலன் கருதி ஆவணத்தின் அடிப்படையில் சாட்சியமளிக்கிறேன். கடந்த 31.05.2022 அன்று மதியம் 02.00 மணியளவில் காவல் உதவி ஆய்வாளர் திரு.செல்வராஜ் அவர்கள் நிலையம் பொறுப்பில் இருந்து வந்த போது பாலமுத்து மகன் மாதேஷ்வரன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 152/2022 இந்திய தண்டனை சட்டப்பிரிவுகள் 294 (b), 323 மற்றும் 506 part I–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். (**அந்த புகார் அ.சா.ஆ.2/அ.சா.4 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3/அ.சா.4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**).

2. பிறகு முதல் தகவல் அறிக்கையின் நகலை புகார் வாக்குமூலத்துடன் இணைத்து அன்றைய தினமே கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்துள்ளார். பிறகு அன்றையதினமே மதியம் 03.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சங்கர் மற்றும் நிரஞ்குமார் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். (**அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.4/அ.சா.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5/அ.சா.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பிறகு சாட்சிகள் மாதேஷ்வரம், தங்கமணி, தனராஜா, மதிவாணன் மற்றும் பார்வை மகஜர் சாட்சிகளை தனித்தனியே விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தார். பிறகு சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரியை தேடிச் சென்றுள்ளார். பிறகு 09.07.2022 அன்று எதிரியானவர் மாண்புமிகு திருச்சிராப்பள்ளி முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில்

முன்பிணை பெற்று சென்றுவிட்டதால் அவர் மீது கைது நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இறுதியாக காவல் உதவி ஆய்வாளர் திரு. செல்வராஜ் தனது புலன்விசாரணையை முடித்துக்கொண்டு எதிரியின் மீது இந்திய தண்டனை சட்டப்பிரிவு 294 (b), 323 மற்றும் 506 part I–ன் கீழ் குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் புகார் எதுவும் அளிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. புகார்தாரரிடம் இருந்து வெற்றுத் தாளில் கையொப்பம் மட்டும் பெறப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்திலிருந்து தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. சரிவர புலன்விசாரணை செய்யப்படாமல் எதிரி மீது இயந்திரத்தனமாக குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

Taken over by me in open court read over of the witness and admitted by the witness to be correct

(SD/–K.R.Balaji)
Judicial Magistrate III,
Tiruchirappalli.